சுருக்கம்

பாசனம் – நீர்வள ஆதாரத்துறை – 2010–2011ஆம் ஆண்டு மானியக் கோரிக்கையில் அறிவிக்கப்பட்ட திட்டம் – திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், ஆனைக்குளம் கிராமத்தில் நம்பியாற்றின் குறுக்கே உள்ள மைலாப்புதூர் அணைக்கட்டை மறுசீரமைத்தல் நபார்டு வங்கி ஆர்ஐடிஎப் XVI–ன் கீழ் நிதி உதவியுடன் ரூபாய் 8.00 கோடி மதிப்பீட்டில் செயற்படுத்துதல் – நிர்வாக ஒப்புதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

பொதுப்பணி (டபிள்யூ1) துறை

அரசாணை (நிலை) எண் 344

நாள் 30.11.2010
திருவள்ளுவர் ஆண்டு 2041
கார்த்திகை 14

படிக்க:

1 தலைமைப் பொறியாளர், திட்ட உருவாக்கம் அவர்களின் கடித எண் B/3000/அறிவிப்புகள்/ 2010-2011 நாள் 22.06. 2010.

2 பொது மேலாளர், நபார்டு வங்கி, சென்னை கடித எண் NB(TN) SPD/98/RIDF XVI (Tamil Nadu)/111/PSC/ 2010-11, நாள் 31.08.2010

———————

**ஆணை:**

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 2010–2011 ஆம் ஆண்டிற்கான பொதுப்பணித் துறை மானியக் கோரிக்கையின்போது, திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், ஆனைக்குளம் கிராமத்தில் நம்பியாற்றின் குறுக்கே உள்ள மைலாப்புதூர் அணைக்கட்டை மறுசீரமைத்தல் திட்டத்தை ரூ.8.00 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளார்.

2. சட்டமன்றப் பேரவையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பின் அடிப்படையிலும், இத்திட்டத்தின் அவசியம் மற்றும் அவசரத்தை முன்னிட்டும், திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், ஆனைக்குளம் கிராமத்தில் நம்பியாற்றின் குறுக்கே உள்ள மைலாப்புதூர் அணைக்கட்டை மறுசீரமைத்தல் திட்டத்திற்கான மதிப்பீட்டினை ரூ.8.00 கோடி (2010–2011 ஆம் ஆண்டு விலை விவரப்படி) தயாரித்து நீர்வள ஆதாரத்துறை தலைமைப் பொறியாளர் (திட்ட உருவாக்கம்) அவர்கள் அரசின் ஒப்புதல் வேண்டி அனுப்பியிருந்தார். மேற்காணும் இத்திட்டத்திற்கான மதிப்பீடுகள் நிதி உதவி வேண்டி நபார்டு வங்கிக்கு பரிந்துரை செய்யப்பட்டது.

3. திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், ஆனைக்குளம் கிராமத்தில் நம்பியாற்றின் குறுக்கே உள்ள மைலாப்புதூர் அணைக்கட்டை மறுசீரமைத்தல் திட்டத்திற்கு நபார்டு வங்கி ஆர்ஐடிஎப் XVI (RIDF-XVI) (ஊரக அடிப்படை வசதி மேம்பாட்டு நிதியுதவி திட்டம் 16)–ன் கீழ் கடனுதவி அளிக்க ஒப்புதல் அளித்துள்ளது. ரூ. 8.00 கோடி மதிப்பீட்டிலான இத்திட்டத்திற்கு நபார்டு வங்கியால் வழங்கும் கடனுதவி ரூ.7.60 கோடி போக மீதித் தொகை ரூ. 0.40கோடி மாநில அரசால் வழங்கப்படும்.

த.பி.பா

**4.** நீர்வளஆதாரத்துறை, தலைமைப் பொறியாளர் (திட்ட உருவாக்கம்) அவர்களின் கோரிக்கையினை, அரசு கவனத்துடன் பரிசீலித்து, திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், ஆனைக்குளம் கிராமத்தில் நம்பியாற்றின் குறுக்கே உள்ள மைலாப்புதூர் அணைக்கட்டை மறுசீரமைக்கும் பணியினை ரூ.**8.00** கோடி (ரூபாய் எட்டு கோடி மட்டும்)க்கான திட்ட மதிப்பீட்டிற்குள் மேற்கொள்ள அரசு நிர்வாக ஒப்புதல் அளித்து ஆணையிடுகிறது. இச்செலவினத்தில் ரூ. **7.60** கோடி (ரூபாய் ஏழு கோடியே அறுபது இலட்சம் மட்டும்) நபார்டு வங்கியின் ஆர்.ஐ.டி.எப். XVI (Rural Infrastructure Development Fund XVI) (ஊரக அடிப்படை வசதி மேம்பாட்டு நிதியுதவி திட்டம் **16**)ன் கீழ் கடனாகப் பெறவும், மாநில அரசின் நிதியிலிருந்து ரூ.**40.00** இலட்சம் (ரூபாய் நாற்பது இலட்சம் மட்டும்) வழங்கவும் அரசு அனுமதித்து ஆணையிடுகிறது.

**5.** மேலே பத்தி **4–**ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் கோரிக்கை எண் **40–01**ன் கீழ் துவக்கப்பட்ட கீழ்க்கண்ட புதிய கணக்கு தலைப்பின் கீழ் பற்று வைக்கப்படும்:–

"**4701** – பெரிய, நடுத்தர பாசனத் திட்டங்கள் குறித்த மூலதனச் செலவு – **03** நடுத்தர பாசனம் – வணிகத் தன்மை வாய்ந்தது – **345** நடுத்தர பாசனத் திட்டங்கள் – பதினொன்றாம் ஐந்தாண்டு திட்டப் பணிகள் – II மாநிலத் திட்டம் – JK ஊரக உள் கட்டமைப்பு மேம்பாட்டு நிதி XVI-ன் கீழ் நபார்டு வங்கி கடனுதவியுடன் ஆனைக்குளம் கிராமத்தில் நம்பியாற்றின் குறுக்கே உள்ள மயிலாப்புதூர் அணை மறுசீரமைப்பு பணி – **16** பெரும்பணிகள் (கு.தொ.கு. **4701–03–345–JK–1609**) ."

**6.** மேலே பத்தி **5**ல் உள்ள புதிய கணக்கு தலைப்பிற்கு முதன்மைத் தலைமைப் பொறியாளர், நீர்வளஆதாரத்துறை மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), பொதுப்பணித்துறை அவர்கள் மதிப்பீடு, கணக்கு நேரமைப்பு மற்றும் கட்டுப்பாட்டு அதிகாரியாவார்.

**7.** சம்பந்தப்பட்ட சம்பள கணக்கு அலுவலர் / கருவூல கணக்கு அலுவலர் மேற்கண்ட புதிய கணக்கு தலைப்பினை தங்கள் கணக்குகளில் துவக்கிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

**8.** மேலே பத்தி **4–**ல் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள செலவினம் ஒரு புதுப் பணி (New Service) குறித்த செலவினமாகும். இதற்கு சட்டமன்றப் பேரவையின் ஒப்புதல் பின்னர் பெறப்படும். சட்டமன்றப் பேரவையின் ஒப்புதலை எதிர்நோக்கி, இச்செலவினம் முதலில் எதிர்பாரா செலவு நிதியிலிருந்து (Contingency Fund) முன்பணமாக பெற்று மேற்கொள்ளப்படும். இதற்கான ஆணை நிதி (வ.செ.பொது–I) துறையிலிருந்து தனியாக வெளியிடப்படும். எதிர்பாரா செலவு நிதியிலிருந்து முன்பணம் ஒப்பளிப்பு உரிய படிவத்தில், இவ்வரசாணையுடன் நிதி (வ.செ.பொது–I) துறைக்கு விண்ணப்பிக்குமாறு, முதன்மைத் தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதார அமைப்பு மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), பொதுப்பணித்துறை அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார். மேலும், இச்செலவினத்தை துணை மானியக் கோரிக்கை / திருத்திய மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கம் **2010–2011**ல் (Supplementary Estimates/ Final Modified Appropriation 2010-2011) சேர்க்கும் பொருட்டு, உரிய செயற்குறிப்பினை உரிய நேரத்தில் நிதி (வ.செ.பொது–I) த்துறைக்கு அனுப்புமாறும் முதன்மைத் தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதார அமைப்பு மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), பொதுப்பணித்துறை அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

9. இவ்வரசாணை நிதித்துறையின் அ. சா. எண் 66364 / PW-II / 10, நாள் 25.11.2010 மற்றும் கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண் 1402 (ஆயிரத்து நானூற்று இரண்டு)டன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

சு. இராமசுந்தரம்
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
முதன்மை தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத்துறை மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), சென்னை – 5.
தலைமைப் பொறியாளர் (திட்ட உருவாக்கம்), நீர்வள ஆதாரத்துறை, சென்னை – 5.
தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத் துறை, மதுரை மண்டலம், மதுரை.
தலைமைப் பொறியாளர் (கட்டுமான ஆதாரம், வடிவமைப்பு மற்றும் ஆராய்ச்சி), நீர்வள ஆதாரத்துறை, சென்னை – 5.
தலைமைப் பொறியாளர் (இயக்கம் மற்றும் பராமரிப்பு), நீர்வள ஆதாரத்துறை, சென்னை – 5.
முதன்மை கணக்காய்வு தலைவர் (A&E), சென்னை 18.
முதன்மை கணக்காய்வு தலைவர் (Audit-I), சென்னை18.
மாவட்ட ஆட்சித் தலைவர், திருநெல்வேலி
மாவட்ட கருவூல அலுவலர், திருநெல்வேலி
பொது மேலாளர், நபார்டு வங்கி, (சென்னை மண்டலம்), 105, 106, மகாத்மா காந்தி சாலை, நுங்கம்பாக்கம், சென்னை – 34.

<u>நகல்</u>
மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் செயலாளர், சென்னை 9.
தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை 9.
நிதி (பொ.ப.II) / வ.செ.(பொ.I) / வ.செ.(பொ.II/(நி.ஆ.II)துறை, சென்னை–9.
பொதுப்பணித்துறையில் உள்ள பாசனப் பிரிவுகள்.
இ.கோ/ உ.ந

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்